**சுருக்கம்**

தொடக்கக் கல்வி – நடுநிலைப்பள்ளிகள் – அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வி ஆண்டில் 65 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்துதல் மற்றும் தரம் உயர்த்தப்படும் நடுநிலைப்பள்ளிகளுக்கு 195 பட்டதாரி ஆசிரியர் பணியிடம் தோற்றுவித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்(சி2) துறை

அரசாணை(நிலை)எண்.201

நாள்: 09.12. 2011
(திருவள்ளுவர் ஆண்டு 2042
கார்த்திகை 23)

படிக்கப்பட்டவை:

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.32959/கே4/2010,
நாள் 02.11.2011, 29.06.2011. மற்றும் 14.09. 2011.

---

**ஆணை:–**

மைய அரசின் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009ன்படி 2010–2011ஆம் கல்வியாண்டில் 61 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கும் மற்றும் ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்கும் ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகிய 3 பாடங்களுக்காக 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 183 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்திட மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மாநிலத் திட்ட இயக்குநரால் தெரிவிக்கப்பட்டதாக தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. தற்போது, 2011–2012ஆம் கல்வியாண்டுக்கு தரம் உயர்த்தப்படவுள்ள 61 நடுநிலைப்பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 61x3=183 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஆறாவது ஊதியக்குழு பரிந்துரையிலான Pay Band 2 ரூ.9300–34800+4400 தரஊதியம் என்கிற சம்பள விகிதத்தில் தோற்றுவிக்குமாறும், இவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்ற பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி நியமனம் செய்துகொள்ள அனுமதி வழங்குமாறும், இப்பணியிடங்களுக்கான சம்பளம் முதலிய இனங்களுக்கான செலவினத்தை, அனைவருக்கும் கல்வித் திட்ட நிதியிலிருந்து ஈடுசெய்யப்படும் என்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், திருச்சி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அம்மாவட்டத்தின் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் 4 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தவும், அப்பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு தலா 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 12 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800+4600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கவும், இந்த

பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளின்படி பின்பற்றி நியமனம் செய்து கொள்ள ஆணை வழங்குமாறும் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்த பின்னர், அரசு அதை ஏற்க முடிவு செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ. 2011–12ஆம் கல்வியாண்டில், 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

ஆ. தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 3 பணியிடங்கள் வீதம் 195 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய விகிதத்தில் ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன.

இ. அனைவருக்கும் கல்வித் திட்ட ஒதுக்கீட்டில் 61 பள்ளிகளை தரம் உயர்த்திட 183 பணியிடங்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதால் கூடுதலாக தரம் உயர்த்தப்படும் 4 பள்ளிகள் மற்றும் 12 பணியிடங்களுக்கான மைய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவியைப் பெற அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மைய அரசின் நிதியுதவி பெறப்படும்வரை இந்த 12 பணியிடங்களுக்கான செலவினம் முழுமையாக மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

ஈ. புதிதாக தோற்றுவிக்கப்படும் 195 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையிலுள்ள நியமன விதிகளைப் பின்பற்றி ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

உ. அரசு நிதி ஒதுக்கீட்டில் இருந்து முதற்கண் மேற்கொள்ளப்படும் இப்பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் அனைவருக்கும் கல்வித் திட்ட நிதியிலிருந்து உடனுக்குடன் ஈடுகட்டப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4ல் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் பெயர் பட்டியல் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே பத்தி 4ல் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும் :–

> “2202 பொதுக்கல்வி–01 தொடக்கக் கல்வி 101 – அரசு தொடக்கப் பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது – AD - அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குதல் 01 சம்பளங்கள் (து.தொ.கு. 2202 – 01– 101–AD-0109)

7. இச்செலவினமானது, அனைவருக்கும் கல்வி (Sarva Shiksha Abhiyan) திட்ட நிதியிலிருந்து உடனுக்குடன் திரும்ப பெறப்பட்டு, கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:-

" 0202 கல்வி, போட்டி விளையாட்டுக்கள் கலையும் பண்பாடும் – 01 பொதுக் கல்வி –101 தொடக்கக் கல்வி – AA. ஏனைய வரவுகள் – 12 அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழான வரவுகள் (கு.தொ.கு. 0202–01– 101–AA-1204)

8. இச்செலவினம் "**புதுத்துணைப் பணி**"த் திட்டமாகக் (New Instrument of Service) கருதப்படும். 2011–2012ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு, சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு நிதி முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள் நிதி (வரவு செலவு பொது–I) த் துறையில் வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதற்கு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தினை 2011–2012ம் ஆண்டு துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 64992/CMPC/11, நாள் 08.12.2011 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1047 (ஆயிரத்து நாற்பத்தி ஏழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
<u>நகல்:–</u>
நிதித் ( வரவு செலவு/(பொது–I/II/சி.எம்.பி.சி) (கல்வி II ) துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வி(வரவு செலவு)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//
அரசு சார்பு செயலாளர்

அரசாணை (நிலை) எண். 201 பள்ளிக் கல்வித் (சி2) துறை நாள் 09.12.2011

**இணைப்பு**

**2011–2012 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ்**
**நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் பெயர் பட்டியல்**

| மாவட்டம் | சட்டமன்ற தொகுதி | ஒன்றியம் | வ.எண். | தொடக்கப்பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் | பொள்ளாட்சி | பொள்ளாட்சி (வடக்கு) | 1. | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி டி.நல்லிக்கவுண்டன்பாளையம் |
| ஈரோடு | அந்தியூர் | அந்தியூர் | 2. | ஊஒதொப., தட்டக்கரை |
| | கோபிசெட்டிபாளையம் | டி.என். பாளையம் | 3. | ஊஒதொப., சிங்கிரிபாளையம், |
| | அந்தியூர் | ” | 4. | ஊஒதொப., பங்களாப்புதூர், |
| | அந்தியூர் | அந்தியூர் | 5. | ஊஒதொப., பெரியசென்குளம், |
| | அந்தியூர் | | 6. | ஊஒதொப., சென்குளம் |
| | | அந்தியூர் | 7. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, கிணத்தடி சோழகா |
| | | அந்தியூர் | 8. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, காக்காயனூர். |
| | | அந்தியூர் | 9. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, கத்திரிமலை |
| | | அந்தியூர் | 10. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, சோளகனை |
| | | அந்தியூர் | 11. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, குட்டையூர். |
| | கோபி | நம்பியூர் | 12. | ஊஒதொப., பிலியம்பாளையம் |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 13. | ஊஒதொப. காடகநல்லி |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 14. | ஊஒதொப., ராமபயலூர் பேருந்து நிலையம். |
| | பவானிசாகர் | சத்தியமங்கலம் | 15. | ஊஒதொப., கோம்பைத்தொட்டி, |
| | கோபிசெட்டிபாளையம் | நம்பியூர் | 16. | ஊஒதொப., குதிரைக்கல்பாளையம் |
| | | நம்பியூர் | 17. | ஊஒதொப., திருமனாதம்பாளையம் |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 18. | ஊஒதொப., மல்லியம்மன்துர்கம் |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 19. | ஊஒதொப., எக்கத்தூர் |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 20. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, நகலூார் |
| | பவானிசாகர் | சத்திய மங்கலம். | 21. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி., பத்திரிபடுகு |
| | பவானிசாகர் | பவானிசாகர் | 22. | ஊஒதொப., முத்துராசாநகர் |
| | பவானிசாகர் | தாளவாடி | 23. | ஊஒதொப., சிக்கநந்தி |
| | பவானிசாகர் | தாளவாடி | 24. | ஊஒதொப., காடுபசுவன்மாளம் |
| | பவானிசாகர் | தாளவாடி | 25. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, பெஜலட்டி |
| | பவானிசாகர் | தாளவாடி | 26. | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி, கானக்கரை |
| காஞ்சீபுரம் | காஞ்சீபுரம் | காஞ்சீபுரம் | 27. | ஊஒதொப., பொன்னையம்மன்பட்டரை |
| | காஞ்சீபுரம் | காஞ்சீபுரம் | 28. | ஊஒதொப., மேட்டுக்குப்பம் |
| | செய்யூர் (தனி) | சித்தாமூர் | 29. | ஊஒதொப, பொலம்பாக்கம் |
| | தாம்பரம் | சிட்லபாக்கம் | 30. | ஊஒதொப., அன்னைஇந்திராநகர். |
| | செய்யூர் | சித்தாமூர் | 31. | ஆதி திராவிட நல தொடக்கப் பள்ளி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கீழ்மருவத்தூர். |
| கிருஷ்ணகிரி | ஒசூர் | ஒசூர் | 32. | ஊஒதொப., கெலவரப்பள்ளி |
| | தளி | தளி | 33. | ஊஒதொப., நூருந்தசாமிமலை |
| | தளி | தளி | 34. | ஊஒதொப.,கொடக்கரை |
| கரூர் | கரூர் | கரூர் | 35. | ஊஒதொப., தங்கராஜ்நகர்காலனி |
| | கரூர் | கரூர் | 36. | ஊஒதொப., கிழக்கு தவிட்டுபாளையம் |
| | கரூர் | கரூர் | 37. | ஊஒதொப.என்.புதுப்பாளையம். |
| | கரூர் | கரூர் | 38. | ஊஒதொப.,நொச்சிப்பாளையம் |
| | கரூர் | கரூர் | 39. | ஊஒதொப. பெரியகுளத்துப்பாளையம் |
| | கரூர் | கரூர் | 40. | ஊஒதொப.,திருமுக்கூடலூர். |
| | கிருஷ்ணராயபுரம் | கிருஷ்ணராயபுரம் | 41. | ஊஒதொப., மலைப்பட்டி |
| | கிருஷ்ணராயபுரம் | கிருஷ்ணராயபுரம் | 42. | ஊஒதொப., வடக்கு கல்லுப்பட்டி |
| | கிருஷ்ணராயபுரம் | கிருஷ்ணராயபுரம் | 43. | ஊஒதொப., கம்பளியாம்பட்டி |
| | கிருஷ்ணராயபுரம் | தாந்தோணி | 44. | ஊஒதொப., குமாரபாளையம் |
| | கிருஷ்ணராயபுரம் | தாந்தோணி | 45. | ஊஒதொப., மூக்கணாங்குறிச்சி |
| | குளித்தலை | குளித்தலை | 46. | ஊஒதொப., குமாரமங்கலம் |
| | குளித்தலை | குளித்தலை | 47. | ஊஒதொப., குறிச்சி |
| திருவள்ளூர். | திருவள்ளூர் | கடம்பத்தூர் | 48. | ஊஒதொப., உசேன்நகரம். |
| திருப்பூர் | பல்லடம் | பொங்கலூர் | 49. | ஊஒதொப., சேமலைகவுண்டம்பாளையம் |
| | திருப்பூர் | திருப்பூர் வடக்கு | 50. | ஊஒதொப., பெரியார் காலனி |
| | | திருப்பூர் | 51. | ஊஒதொப., கூலிப்பாளையம் |
| துத்துக்குடி | திருச்செந்துார் | திருச்செந்துார் | 52. | ஊஒதொப., தைக்காதெரு, காயல்பட்டினம் |
| | விளாத்திகுளம் | புதுார் | 53. | ஊஒதொப., மணியக்காரன்பட்டி |
| | கோவில்பட்டி | கோவில்பட்டி | 54. | ஊஒதொப. சுரைக்காய்பட்டி |
| | கோவில்பட்டி | கோவில்பட்டி | 55. | ஊஒதொப., கிழவிப்பட்டி |
| வேலூர் | சோளிங்கர் | காவேரிபாக்கம் | 56. | ஊஒதொப., வெங்குப்பட்டு |
| | இராணிப்பேட்டை | ஆற்காடு | 57. | ஊஒதொப. அன்சால்நகர் |
| விருதுநகர் | சாத்தூர் | சாத்தூர் | 58. | ஊஒதொப., மேட்டமலை |
| | திருவில்லிபுத்தூர் | வத்ராப் | 59. | ஊஒதொப., சிந்தப்பள்ளி |
| | சாத்தூர் | வெம்பக்கோட்டை | 60. | ஊஒதொப., மீனாட்சிபுரம் |
| | | | 61. | ஊஒதொப., எட்டக்காப்பட்டி |
| திருச்சிராப்பள்ளி | ஸ்ரீரங்கம் | அந்தநல்லூர் | 62 | தேவி நகராட்சி துவக்கப்பள்ளி, ஸ்ரீரங்கம் |
| | ஸ்ரீரங்கம் | அந்தநல்லூர் | 63 | நேருஜி நினைவு துவக்கப்பள்ளி, மேலக்கொண்டையம்பேட்டை,ஸ்ரீரங்கம் |
| | ஸ்ரீரங்கம் | மணப்பாறை | 64 | ஊஒதொப.,கே.பெரியப்பட்டி |
| | ஸ்ரீரங்கம் | மணப்பாறை | 65 | ஊஒதொப.,காட்டுப்பட்டி |

த.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்